**செய்தி வெளியீடு எண்: 437** **நாள்: 09.09.2016**

## செய்தி வெளியீடு

01.01.2017ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

11.09.2016 மற்றும் 25.09.2016 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களிலும் (பொதுவாக பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகள்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம், இடம் மாற்றலுக்கான படிவங்களை பெறுதல் பொருட்டு இம்முகாம்கள் நடைபெறவுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் இம்முகாம்கள் 18.09.2016 மற்றும் 25.09.2016 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனைத்து நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களிலும் அலுவலர்கள் 11.09.2016 மற்றும் 25.09.2016 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெற்றுக் கொள்வர்.

வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கான இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**